# வடக்கு மாகாண பொதுச்சேவைக்கு இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017

வடக்கு மாகாண பொதுச் சேவையில் வெற்றிடமாகவுள்ள கீழ் குறிப்பிடப்படும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக கீழே குறிப்பிடப்பட்ட தகைமையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி **16.06.2017** ஆகும்.

| இல | பதவிப்பெயர் | பதவி இல | வெற்றிடம் |
|---|---|---|---|
| I | இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் தொழிநுட்ப உத்தியோகத்தர் (சிவில்) தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017 | 01 | **61** |
| II | இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் தொழிநுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017 | 02 | |
| III | இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் ஆய்வுகூடத் தொழிநுட்பவியலாளர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2017 | 03 | **06** |
| IV | இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் ஆய்வுகூடத் தொழிநுட்பவியலாளர் பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017 | 04 | |
| V | இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் தொழிநுட்ப உத்தியோகத்தர் (படவரைஞர்) பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2017 | 05 | **03** |

## 02. சேவை நிபந்தனைகள்:-

1. அங்கீகரிக்கப்பட்ட சேவைப்பிரமாணக்குறிப்பு மற்றும் ஆட்சேர்ப்புத்திட்ட விதிகளுக்கு அமைய சேவை நிபந்தனைகள் தீர்மானிக்கப்படும். இவ்நியமனம் நிரந்தரமானவையும் ஓய்வூதியத்திற்கு உரித்துடையனவுமாகும்.

2. இவை யாவும் இடமாற்றச் சேவைகளாகும். இந் நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும்.

## 03. பொதுத் தகைமைகள்:-

03.1 விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

03.2 சிறந்த தேகாரோக்கியமும் நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

03.3 அ) விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவராக இருத்தல் வேண்டும். இவ் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் உள்ள 06 ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டுகளாயினும் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

ஆ) விண்ணப்பதாரர் அல்லது பெற்றோர் வடக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருப்பதுடன் ஆகக்குறைந்தது 05 வருடங்கள் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும். (நேர்முகப் பரீட்சையின் போது தமது நிரந்தர வதிவிடத்தினை உறுதிப்படுத்துவதற்கு வாக்காளர் பட்டியலின் பிரித்தெடுப்பிதழை சமர்ப்பித்தல் வேண்டும்)

**குறிப்பு:**

ஒரு விண்ணப்பதாரியானவர் ஒரு மாவட்டத்திற்கு கூடுதலான வேறு மாவட்டங்களுக்கான வெற்றிடங்களுக்கு போட்டியிட அனுமதிக்கப்படமாட்டார். ஒரு விண்ணப்பதாரி தனது விருப்பத்தெரிவான ஒரு மாவட்டத்தை தெரிவுசெய்தபின் பின்னர் அதனை மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

03.4 விண்ணப்பதாரி **விண்ணப்பமுடிவுத்திகதியன்று அல்லது அதற்கு முன்னர் 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும்** இருத்தல் வேண்டும்.

## 04. கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் :-

| தொ இல | பதவிப் பெயர் | கல்வித் தகைமைகள் | தொழில்சார் தகைமைகள் |
|---|---|---|---|
| 01 | தொழிநுட்ப உத்தியோகத்தர் (சிவில்) தரம் III<br><br>**மற்றும்**<br><br>ஆய்வுகூடத் தொழிநுட்பவியலாளர் தரம் III | க.பொ.த (சா/த)ப் பரீட்சையில் **ஒரே அமர்வில்** மொழி (தமிழ் / சிங்களம் / ஆங்கிலம்), கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.<br>**அத்துடன்**<br>க.பொ.த (உ/த)ப் பரீட்சையில் கணிதப்பாடநெறியில் தூய கணிதம் / பிரயோக கணிதம் / இணைந்த கணிதம் அத்துடன் பௌதீகவியல் ஆகிய பாடங்கள் உட்பட மூன்று பாடங்களில் **ஒரே அமர்வில்** சித்திபெற்றிருத்தல் வேண்டும் | (1) மொரட்டுவ பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி தொழில்நுட்பவியல் நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா (சிவில்) சான்றிதழ்.<br>**அல்லது**<br>(2) தேசிய பயிலுநர் மற்றும் தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா (சிவில்) சான்றிதழ்.<br>**அல்லது**<br>(3) கல்வி உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா (சிவில்) சான்றிதழ்.<br>**அல்லது**<br>(4) அங்கீகரிக்கப்பட்ட இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்பவியல் டிப்ளோமா (சிவில்) சான்றிதழ். |

| | | | |
|---|---|---|---|
| | | | **அல்லது**<br>(5) இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் (IESL) நடாத்தப்படும் பொறியியல் பரீட்சையில் முதலாம் பகுதியை திருப்திகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>(6) தொழிநுட்ப உத்தியோகத்தர் (சிவில்) துறை தொடர்பான தேசிய தொழில்த் தகைமை (NVQ) மட்டம் 6 இனை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>(7) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட தொழில் நுட்பவியல் சான்றிதழ்களை வெளியிடுகின்ற நிறுவனங்களிடமிருந்து கருத்துக்களைப் பெற்றுக்கொண்ட பின்னர் மேற்படி தொழிநுட்பவியல் தகைமைகளுக்கு சகல வகையிலும் சமமானவையென மூன்றாம் நிலை தொழில்க் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படுகின்ற வேறு தகைமைகள். |
| 02 | தொழிநுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பயிற்சித் தரம்<br>**(பயிற்சிக் காலம் 01 வருடம்)**<br><br>**மற்றும்**<br><br>ஆய்வுகூடத் தொழிநுட்பவியலாளர் பயிற்சித் தரம்<br>**(பயிற்சிக் காலம் 01 வருடம்)** | க.பொ.த (சா/த) பரீட்சையில் **ஒரே அமர்வில்** மொழி(தமிழ் / சிங்களம் / ஆங்கிலம்), கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அத்துடன்**<br><br>க.பொ.த (உ/த) பரீட்சையில் கணிதப்பாடநெறியில் தூய கணிதம் / பிரயோக கணிதம் / இணைந்த கணிதம் அத்துடன் பௌதீகவியல் ஆகிய பாடங்கள் உட்பட மூன்று பாடங்களில் **ஒரே அமர்வில்** சித்திபெற்றிருத்தல் வேண்டும். | 1. மூன்றாம் நிலை தொழில்க் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியின் தேசிய தொழில்நுட்பவியல் சான்றிதழ் (NCT) (சிவில்) பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>2. மூன்றாம் நிலை தொழில்க் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் தொழில்த்துறை தொழிநுட்பவியலாளர் துறையில் உள்ள பொருத்தமான பதவிக்கு தேசிய சான்றிதழ் பாடநெறியினை(NCC) (சிவில்) திருப்திகரமாக பின்பற்றி உரிய சான்றிதழினை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>3. உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட தொழில் நுட்பவியல் சான்றிதழ்களை வெளியிடுகின்ற நிறுவனங்களிடமிருந்து கருத்துக்களைப் பெற்றுக்கொண்ட பின்னர் மேற்படி தொழிநுட்பவியல் தகைமைகளுக்கு சகல வகையிலும் சமமானவையென மூன்றாம் நிலை தொழில்க் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படுகின்ற வேறு தகைமைகள். |
| 03 | தொழிநுட்ப உத்தியோகத்தர் (படவரைஞர்) பயிற்சித் தரம்<br>**(பயிற்சிக் காலம் 01 வருடம்)** | க.பொ.த (சா/த) பரீட்சையில் **ஒரே அமர்வில்** மொழி(தமிழ் / சிங்களம் / ஆங்கிலம்), கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அத்துடன்**<br>க.பொ.த (உ/த) பரீட்சையில் கணிதப்பாடநெறியில் தூய கணிதம் / பிரயோக கணிதம் / இணைந்த கணிதம் அத்துடன் பௌதீகவியல் ஆகிய பாடங்கள் உட்பட மூன்று பாடங்களில் **ஒரே அமர்வில்** சித்திபெற்றிருத்தல் வேண்டும். | 1. மூன்றாம் நிலை தொழில்க் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் ஒருவருட படவரைஞர் முழுநேரக் கற்கைநெறியினை திருப்திகரமாக பின்பற்றி சான்றிதழினைப் பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>2. உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட தொழில் நுட்பவியல் சான்றிதழ்களை வெளியிடுகின்ற நிறுவனங்களிடமிருந்து கருத்துக்களைப் பெற்றுக்கொண்ட பின்னர் மேற்படி தொழிநுட்பவியல் தகைமைகளுக்கு சகல வகையிலும் சமமானவையென மூன்றாம் நிலை தொழில்க் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படுகின்ற வேறு தகைமைகள். |

**குறிப்பு**

- தொழிநுட்ப உத்தியோகத்தர் தரம் III இற்கான நேரடி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.
- ஆட்சேர்ப்புத்தரமான தரம் III இற்கு ஆட்சேரப்புச் செய்வதற்கு தகுதி பெற்ற விண்ணப்பதாரிகள் போதுமானதாக இல்லாத பட்சத்தில் மீதியான வெற்றிடங்கள் பயிற்சித்தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்பவர்களூடாக நிரப்பப்படும்.

**05**. **ஆட்சேர்ப்பு முறை :-**

- எழுத்துப் பரீட்சையில் திறமை அடிப்படையிலும், ஆட்சேர்ப்பு நேரத்தில் வலுவிலுள்ள பொது நிர்வாக சுற்றறிக்கைகளிற்கும், ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கமைவாகவும், தேசிய மற்றும் மாகாண கொள்கைகளுக்கு அமையவும் ஆட்சேர்ப்பு செய்யப்படும். எழுத்துப் பரீட்சை நடாத்துவது கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும்.
- இப்பரீட்சையில் சித்தியடைவதற்கு ஒவ்வொரு வினாத்தாளிற்குமான மொத்தப் புள்ளிகளில் ஆகக்குறைந்தது 40% புள்ளிகளை பெறவேண்டும்.
- விண்ணப்பதாரிகள் மொத்த புள்ளிகளில் முன்னுரிமை அடிப்படையில் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். இதன் போது மேலதிக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. நேர்முகப் பரீட்சையின் போது இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் பரிசீலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரியவந்தால் இப் பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும்.
- வெற்றிடத்தின் 03% மாற்றுத் திறனாளிகளுக்காக (வலது குறைந்தோர்) ஒதுக்கப்படும். பரீட்சார்த்தி நியமனத்திற்காக தெரிவுசெய்யப்படும் போது குறித்த பதவியில் கடமையாற்றுவதற்கு தனது மாற்றுத் திறனானது (வலது குறைவானது) தடையாக அமையாது என்பதனை விசேட மருத்துவப் பரிசோதனை மூலம் நிரூபித்தல் வேண்டும்.

*குறிப்பு:-*

இவ்விண்ணப்ப முடிவுத்திகதியன்று அல்லது அதற்கு முன் கோரப்பட்டுள்ள சகல தகைமைகளையும் கொண்டிருத்தல் வேண்டும். பெறுபேறுகளை எதிர்பார்த்துச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**06**. **பரீட்சைக்கட்டணம் :-**

விண்ணப்பதாரி வதியும் வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள எந்தவொரு பிரதேச செயலகம் ஒன்றிலும் பரீட்சைக் கட்டணமாக **வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளர்** அவர்களின் **3401** என்ற வைப்பு கணக்கிற்கு ரூபா **500/=** ஐச் செலுத்தி, செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டில் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக்கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்பட மாட்டாது.

**07**. **விண்ணப்பிக்கும் முறை :-**

- இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவங்களிற்கமைவாக A4 அளவிலான (21செ.மீX29செ.மீ) தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பப் படிவங்களைத் தயாரித்தல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பத்தை **16.06.2017ம்** திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.
- அனுப்பிவைக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக்குறிப்பிடல் வேண்டும்.
- அரச / மாகாண சபை உத்தியோகத்தர்கள் விண்ணப்பிக்க விரும்பின் தங்கள் திணைக்களத்தலைவரூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.
- ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் தகைமையுடைய விண்ணப்பதாரிகள் உரிய முறையில் பூரணபடுத்தி விண்ணப்பத்தை அனுப்பிவைத்தல் வேண்டும். சரிவர பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக் கொள்ளல் பயனுள்ளதாகும். விண்ணப்பத்தின் புகைப்படப்பிரதி, முன்னோடிப்பிரதி ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் பரீட்சைத் திகதிக்கு குறைந்த பட்சம் 03 நாட்களுக்கு முன்னராவது அனுமதி அட்டை கிடைக்காவிடின், அனுமதி அட்டை கிடைக்காமைபற்றி சகல விபரங்களுடன் **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும் அல்லது அலுவலக தொலைபேசி - **021-221 9939** அல்லது தொலைநகல் இலக்கமான **021-221 9940** எனும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுதல் வேண்டும்.

**08. பரீட்சை நகரம் :-**

பரீட்சை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட பரீட்சை நகரங்களும் அவற்றின் எண்களும் பின்வருமாறு.

| நகரம் | நகரஎண் |
|---|---|
| யாழ்ப்பாணம் | 01 |
| வவுனியா | 03 |

ஒரு பரீட்சை நகரம் சார்பாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து இப்பரீட்சை அண்மையிலுள்ள பரீட்சை நகரத்திற்கு மாற்றப்படலாம்.

**09. மொழி மூலம் :-**

பரீட்சைகள் யாவும் தமிழ் மற்றும் சிங்கள மொழிமூலம் நடாத்தப்படும்.

**10. சம்பள அளவுத்திட்டம் :-**

- **இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் தொழிநுட்ப உத்தியோகத்தர் - சிவில் / ஆய்வுகூடத் தொழிநுட்பவியலாளர்**

  பொது நிர்வாகச் சுற்றறிக்கை 03/2016க்கு அமைவான, சம்பளத் தொகுதி **MN 3 - 2016** க்கு ஏற்ப சிவில் / ஆய்வுகூடத் தொழில்நுட்பவியலாளர் சேவையின் தரம் - III ற்கான திரட்டிய சம்பள விகிதமானது ரூபா **31, 040 – 10 x 445 - 11 x 660 - 10 x 730 – 10 x 750 – 57, 550/-** ஆகும். (ரூபா 31,930 சம்பள படிநிலைக்கு முன் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தி பெறல் வேண்டும்) எவ்வாறாயினும் மேற்படி சுற்றறிக்கையின் அட்டவணை – II இல் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

- **இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் உத்தியோகத்தர் - சிவில் / ஆய்வுகூடத் தொழிநுட்பவியலாளர் / படவரைஞர் பயிற்சித் தரம்**

  பொது நிர்வாக சுற்றறிக்கை 03/2016க்கு அமைவாக, அச் சுற்றறிக்கையின் **அட்டவணை V** இல் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு ஏற்ப மாதாந்தப் படி மற்றும் சீராக்கற்படி என்பன வழங்கப்படும்.

  1ம் ஆண்டு - ரூபா 18,728.00<br>
  2ம் ஆண்டு - ரூபா 18,935.00<br>
  } மற்றும் சீராக்கற் படியும்

**11. எழுத்துப் பரீட்சை :-**

இப்பரீட்சை தமிழ் / சிங்களம் ஆகிய மொழி மூலங்களில் நடத்தப்படும். இப்பரீட்சை இரண்டு வினாப்பத்திரங்களை கொண்டதாக இருக்கும்.

| **வினாப்பத்திரம்** | **காலம்** | **மொத்தப் புள்ளிகள்** | **சித்திப் புள்ளிகள்** |
|---|---|---|---|
| உளச்சார்புப் பரீட்சை | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| தொழிநுட்பவியலுடன் தொடர்புடைய பரீட்சை | 03 மணித்தியாலங்கள் | 100 | 40 |

**பாடத்திட்டம் :-**

- **உளச்சார்புப் பரீட்சை**
  இவ்வினாத்தாளானது விண்ணப்பதாரியின் தர்க்கிக்கும் திறன், முடிவெடுக்கும் திறன் மற்றும் பகுப்பாய்வு செய்யும்திறன் ஆகியவற்றினை மதிப்பீடு செய்யும் பொருட்டு தயாரிக்கப்படும்.

- **தொழிநுட்பவியலுடன் தொடர்புடைய பரீட்சை – சிவில் / ஆய்வுகூடத் தொழிநுட்பவியலாளர்**
  இவ்வினாத்தாளானது விண்ணப்பதாரியின் கட்டட நிர்மானம் பற்றிய அடிப்படை அறிவு, கட்டடத்திற்கான மூலப்பொருட்கள், கட்டடத்திற்குரிய வரைவு(Plan) தயாரித்தல் மற்றும் வரைவை (Plan) விளங்கிக்கொள்ளுதல், அளவீடுகள், அடித்தளம், மண்ணின் வகை, வீதி நிர்மானம் மற்றும் பராமரிப்பு, மதிப்பீடு தயாரித்தல், நீர் விநியோகம், வடிகால் அமைப்பு மற்றும் கழிவகற்றல் ஆகியவற்றின் அறிவினை மதிப்பீடு செய்யும் பொருட்டு தயாரிக்கப்படும் வினாத்தாளாகும்.

- **தொழிநுட்பவியலுடன் தொடர்புடைய பரீட்சை – படவரைஞர்**

  நிர்மாணக்கலை ஆக்கங்கள் தொடர்பிலான அனுபவம் கட்டட நிர்மாணக்கலை பற்றிய அறிவு, பரிமாணத்திற்கேற்ப வரைதல், திட்டபடமொன்றின் குறிப்பொன்றைப் அண்ணளவாக புரிந்து கொள்ளும் ஆற்றல் மற்றும் அவற்றை மேம்பாடு செய்யும் ஆற்றல் கட்டட அமைப்பு நிர்மாணங்கள் தொடர்பிலான அடிப்படை அறிவு அளவுகளை கணிப்பீடு செய்தல் தொடர்பிலான அடிப்படை அறிவு, கேத்திரகணித மற்றும் எந்திரவியல் வரைவுகள் தொடர்பிலான அறிவு என்பவற்றை பரீட்சிக்கும் வினாக்களாக அமையும்.

**12. பொய்யான தகவல்களுக்கான தண்டனை :-**

விண்ணப்பங்களை பூர்த்தி செய்யும்போது மிகக்கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். பரீட்சார்த்தி சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

**13.** இவ் அறிவித்தலில் குறிப்பிடப்படாத அல்லது விளக்கமற்ற விடயங்கள் தொடர்பில் வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினாலேயே இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும். அத்துடன் தமிழ்மொழி, சிங்கள மொழி உரைகளிற்கிடையிலான ஏதேனும் வேறுபாடு காணப்படின் தமிழ் மொழி உரையே மேலோங்கும்.

**ரூ.வரதலிங்கம்.**
செயலாளர்,
மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.